1981 மே 5] 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன். வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்க பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. வரவு-செலவுத் திட்டம் 1981-82 வாக்கெடுப்பு

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 55,85,23,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''